# கல்வி அமைப்பை மாற்றியமைக்க அமைச்சரவை அங்கீகாரம்!

விலை ரூபா 5-00

ஈழநாடு

EELANADU
NATIONAL TAMIL DAILY

மலர் 37 திருவள்ளுவர் ஆண்டு 2026 மாசி 13 இதழ் 15
யாழ்ப்பாணம் சனிக்கிழமை 25-2-1995

[கொழும்பு]

இலங்கையின் கல்வி அமைப்பை மாற்றி அமைப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது என்று உயர் கல்வி அமைச்சர் றிச்சர்ட் பத்திரன தெரிவித்துள்ளார்.

புதிய திட்டத்தின்கீழ் பிரதேச கல்வி அலுவலகங்கள். நிறைவேற்றுக் கல்வி அதிகாரியின் கட்டுப்பாட்டில் செயல்படும். பாடசாலை நிர்வாகம், பாடசாலை மாணவர்களுக்கு வழங்கப்படும் வசதிகள் ஆகியவற்றுக்கு பிரதேச செயலகங்

(4ம் பக்கம் பார்க்க)

தீவிரவாத குழுவுடன்

## முஸ்லிம் காங்கிரஸ் இணைந்து கொண்டது

[கொழும்பு]

அகில இலங்கை முஸ்லிம் காங்கிரசும்-முஸ்லிம் தீவிரவாதக் குழுவான முஸ்லிம் ஐக்கிய முன்னணியும் நேற்று ஒன்ருக இணைந்து கொண்டன.

இனப்பிரச்னைக்கு வருங் காலத்தில் தீர்வு காணப்படும் போது முஸ்லிம்களுக்கும் கணிசமான அளவு பங்குதரப்படவேண்டும் என்ற கோரிக்கையை விடுப்பதற்காகவே இந்த இரு கட்சிகளும் தற்போது ஒன்ருக இணைந்து கொண்டிருப்பதாகவும் இத

(4-ம் பக்கம் பார்க்க)

# வடபகுதி போக்குவரத்துக்கு பூநகரி-ஆனையிறவு பாதைகளை திறப்பதற்கு அரசாங்கம் முடிவு!

## ஜனாதிபதி செயலகம் அறிவிப்பு

[கொழும்பு]

வடபகுதிக்கு வழமையான போக்குவரத்து வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பதற்காக பூநகரி சங்குப்பிட்டி — ஆனையிறவுப் பாதைகளைத் திறப்பதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது. ஜனாதிபதி செயலகம் நேற்றிரவு வெளியிட்ட அறிக்கை ஒன்றின் மூலம் அரசாங்கம் இந்த முடிவை அறிவித்தது.

வடபகுதிக்கு போக்குவரத்து ஏற்படுத்திக் கொடுப்பதற்காக அரசாங்கம் இந்த முடிவை எடுத்துள்ளதாக இந்த மேலும் தெரிவிக்கப்பட்டது. இது வசதிகளை குறித்து விடுதலைப் புலிகளின் பதிலையும் அரசு எதிர்பார்த்திருக்கிறது.

நடவடிக்கைக்கு மேலும் வசதியாக இருக்கும் வகையில் பூநகரி.ஆனையிறவுப் பகுதியிலுள்ள முன்னணிப் பாதுகாப்பு அரண்கள் தற்

(4ம் பக்கம் பார்க்க)

## படைகளில் சகல இனத்தவரும் தேவை

– முன்னாள் அமைச்சர் ஹமீத் –

(கொழும்பு)

பாதுகாப்புப் படைகளில் பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர்களே காணப்படுகின்றனர். எல்லா இனத்தவரும் பாதுகாப்புப் படைகளில் சேர்த்துக் கொள்ளப்பட வேண்டும், அது நாட்டில் பிரச்னைகள் உருவாகும் காலத்தில் கைகொடுத்து உதவிகளை செய்யக் கூடியதாக இருக்கும்.

முன்னாள் அமைச்சர் ஏ சி. எஸ். ஹமீத் நேற்று நாடாளுமன்றத்தில் உரை நிகழ்த்துகையில் இவ்வாறு கூறினார்.

(4ம் பக்கம் பார்க்க)

## சமாதானமுயற்சிவெற்றிபெற பிரிட்டன் உதவி வழங்கும்

பிரிட்டிஷ் அமைச்சர் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்குப் பிரச்னைக்கு திர்வுகாண ஜனாதிபதி ஆரம்பித்துள்ள சமாதான முயற்சிகள் வெற்றியளிக்க பிரிட்டன் தன்னாலான சகல உதவிகளையும் ஒத்துழைப்புகளையும் வழங்கத்தயாராக இருப்பதாக பிரிட்டிஷ் அமைச்சர் நிஹாம் தமது இலங்கை விஜயத்தைமுடித்துக்கொண்டு புறப்படுகையில் கூறினார்.

அவர் இதுபற்றி மேலும் கூறுகையில் "நாட்டில் நிரந்தர சமாதானத்தீர்வு ஒன்று ஏற்படும் வகையில் விடுதலைப்புலிகளும் இணங்குவார்கள் என்று நான் நினைக்கின்றேன். எதிர்காலச் சந்ததியினருக்கு அந்தத்தீர்வுத் திட்டம் ஒருஅமைதியான வாழ்வை தேடிக்கொடுக்கும்.

மின்சார உற்பத்தி நீர்விநியோகம், வீதி அமைத்தல், தொலைத் தொடர்புகள் துறைமுக அபிவிருத்தி போன்ற அனைத்துத் திட்டங்களுக்கும் பிரிட்டன், இலங்கைக்கு உதவி செய்யும். தென் கிழக்கு ஆசியாவிலுள் ஏனையநாடுகளை போன்று இலங்கை விரைவில் செல்வத்தையும், பொருளாதார வளர்ச்சியையும் பெற்றுவிடும் என்று கூறினர். வி-இ

## கிளாலி-பூநகரி படகுசேவை

(யாழ்ப்பாணம்)

கிளாலிபூநகரிபடகுச்சேவை இன்று சனிக்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என விடுதலைப் புலிகளின் அரசியல் துறையினர் அறிவித்துள்ளனர்.

## மோசமான சிங்களவா எம்மத்தியில் இருந்தனர்

– பாரத லஷ்மன்

(கொழும்பு)

உங்களைப் போல் பண்பான சிங்களவர் உள்ளனரா? என்று யாழ்ப்பாணத்தில் விடுதலைப் புலிகள் கேட்டனர். அந்தளவுக்கு மோசமானவர்கள் எம் மத்தியில் இருந்தார்கள் என்று கொழும்பு மாவட்ட பொதுசன ஐக்கிய முன்னணி அங்கத்தவர் பாரத லஷ்மன் பிரேமச்சந்திரா நாடாளுமன்றத்தில் உரையாற்றுகையில் கூறினர்.

அவர் மேலும் பேசுகையில் கூறியதாவது: இனப்பிரச்

(4ம் பக்கம் பார்க்க)

## அரசு புலிகள் இடையில் நிரந்தர யுத்த நிறுத்தம் ஏற்படும்

இல. தூதுவர் மங்களமுனசிங்க

(டில்லி)

இலங்கையில் அரசுப் படைகளுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் நிலவும் பூசல் தீர்ந்து நிரந்தர சண்டை நிறுத்தம் ஒன்று ஏற்படக் கூடிய சூழல் உருவாகி வருவதாக இலங்கையின் இந்தியாவுக்கான புதிய தூதுவர் மங்கள முனசிங்க தெரிவித்துள்ளார்.

நேற்று புதுடில்லியில் தமது நியமனத்துக்கான ஆவணங்களை இந்திய ஜனதிபதி சங்கர் தயாள் சர்மாவிடம் சமர்ப்பித்தபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் இதுபற்றி கூறியதாவது; இலங்கையில் இனப்பூசலைத் தீர்ப்பதற்காக அரசு பேச்சுவார்த்தைகளை தொடக்கி வருகின்றது" என்றுர்.

புதிய தூதுவரை வரவேற்றுப்பேசிய ஜனதிபதி சங்கர்

(4ம் பக்கம் பார்க்க)

## புலிகள் இப்போது பங்கர்கள் எதனையும் அமைக்கவில்லை

– அமைச்சர் ரத்வத்த தெரிவிப்பு

(கொழும்பு)

மோதல் தவிர்ப்பு காலத்தில் விடுதலைப் புலிகள் பங்கர்களை அமைத்து வருகிருர்கள் என பத்திரிகைகளில் வெளிவந்த செய்திகளை பிரதி பாதுகாப்பு அமைச்சர் கேணல் அனுருத்த ரத்வத்த மறுத்துள்ளார்.

பாதுகாப்பு அமைச்சுக்கான வரவு செலவுதிட்ட நிதி ஒதுக்கிடுகள் நேற்று நடாளுமன்றத்தில் அங்கீகரிக்கப்பட்டன. இந்த நிதி ஒதுக்கீடு சம்பந்தமான குழுநிலை விவாதத்தை முடித்துவைத்துப் பேசும் போதே பிரதி பாதுகாப்பு அமைச்சர் இவ்வாறு கூறினர்.

இனப்பிரச்னைக்கு தீர்வுகாண அரசாங்கம் மனப்பூர்வமாக உறுதிகொண்டுள்ளது. விடுதலைப் புலிகளுடன் நடத்தப்படும் பேச்சுக்களும் எட்டப்படும் ஒப்பந்தங்கள் யாவும் பகிரங்கமாக மக்களுக்கு வெளியிடப்படும். மக்களிடமிருந்தோ அரசியல் கட்சிகளிடமிருந்தோ எதுவும் மறைக்

(4ம் பக்கம் பார்க்க)

ஐ. தே. க. நியமித்த

## 8,000 பயிற்சியாளரை பதவி நீக்க அரசு முடிவு

(கொழும்பு)

ஐக்கிய தேசியக் கட்சி பதவியில் இருந்த காலத்தில் அரச நிறுவனங்களில் பயிலுனராகச்சேர்க்கப்பட்ட எட்டாயிரம் பேரை பதவி நீக்கம் செய்வதற்கு அரசாங்கம் முடிவு செய்துள்ளது.

பல்வேறு அரச திணைக்களங்களிலும் கூட்டுத்தாபனங்களிலும் பயிற்சியாளராகச் சேர்ந்து ஆறு மாதம் முதல் சுமார் மூன்று வருடம் வரை பயிற்சியாளராக கடமையாற்றிவரும் சுமார் எட்டாயிரம் பேரை வேலையில் இருந்து அடுத்த மாதம் முதல் நிறுத்துமாறு

(4-ம் பக்கம் பார்க்க)

## வரி விளம்பரம்

### ஆங்கிலம் கணிதம் - 95

O L Distinctiou, Credit பெறுபேறடைய வாரம் ஒவ்வொரு பாடத்திலும் 5மணித்தியாலம். அனுபவமுள்ள B. Sc. ஆசிரியரால் கற்பிக்கப்படும். 85, மணல்தறை லேன், திருநெல்வேலி.

(C-1401)

### இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

இராணுவ நடவடிக்கை காரணமாக கடந்த இரண்டரை வருடங்களாக இடம் பெயர்ந்து மானிப்பாயில் இயங்கி வந்த பண்டத்தரிப்பு ஜசிந்தா றோமன் கத்தோலிக்க வித்தியாலயம் கடந்த திங்கட்கிழமை முதல் மீண்டும் பண்டத்தரிப்புக்கு இடமாற்றம்-செய்யப்பட்டுள்ளது. -72

### இலட்சார்ச்சனை

(அரியாலை)

நந்தாவில் அருள்மிகு முனீஸ்வரர் ஆலய மஹாநியாச இலச்சார்ச்சனை விழா கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமாகி விஷேட அபிடேக ஆராதனைகளுடன் 29 நாட்கள் வரை நடைபெறும்.

24-03-95 வெள்ளிக்கிழமை இலச்சார்ச்சனை பூர்த்தியும் நவோத்தர சங்காபிஷேகமும் நடைபெறவுள்ளது. -59

### திருட்டுப் பொருட்கள் மீட்கப்பட்டன

(நெல்லியடி)

உடுப்பிட்டிப் பகுதியில் இருந்து திருடப்பட்ட இரண்டு நீரிறைக்கும் இயந்திரங்கள், நான்கு தண்ணீர் பைப் குழாய்கள், ஒரு கிடாரம் போன்றவற்றை, கம்பர்மலைப் பகுதியில் விற்பனைக்குக் கொண்டு சென்ற சமயம் வல்வெட்டித்துறை காவல்துறையினரால் மீட்கப்பட்டன. -160

### சமய அறிவு போட்டி ஒத்திவைப்பு

(உடுவில்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் இந்து இளைஞர் சங்கம் மார்ச் 3ம் திகதி நடாத்த இருந்த பாடசாலை மாணவர்க்கிடையிலான சமய அறிவுப் போட்டிகள் மார்ச் 19ம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

பரீட்சைக்கான விண்ணப்பங்களின் முடிவு திகதியும் இம் மாதம் 28ம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது. -109

### முதலாமிடம்

(யாழ்ப்பாணம்)

வேலணை ஊர்காவற்றுறை கோட்டக் கல்வி அலுவலக உடற்பயிற்சிப் போட்டிகள் அண்மையில் யாழ். இந்துக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.

வேலணை கோட்டப் போட்டிகளில் 17 வயது பெண்களுக்கான போட்டியில் முதலாமிடத்தையும், 17 வயது ஆண்களுக்கான போட்டியில் இரண்டாமிடத்தையும் சரவணை நாகேஸ்வரி வித்தியாலயம் பெற்றுள்ளது. -ம

### பயிற்சி

[உடுவில்]

காங்கேசன்துறை மாவட்ட சாரணர் கிளைச் சங்கத்தினரால், குருளைச்சாரணர் அலுவலர் தலைவர்பயிற்சி சாரணர் அணித்தலைவர் கலைக்கூறு II ஆதாரப் பயிற்சி ஆகியன நடாத்தப்பட உள்ளன.

கலைக்கூறு II பயிற்சி இன்று சனிக்கிழமை முதல் 27-ம் திகதி திங்கட்கிழமை வரை சங்கானை சிவப்பிரகாச வித்தியாசாலையிலும் அலுவலர் தலைவர் பயிற்சி நாளை மெமோறியல் ஆங்கிலக் கல்லூரியிலும் நடைபெற உள்ளது. ]109]

# சகல அரசாங்கங்களாலும் தமிழ் கடற்றொழிலாளர் புறக்கணிப்பு

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு பகுதி கடற்றொழிலாளர்கள் திட்டமிட்ட முறையில் சகல ஆட்சியாளர்களாலும் புறக்கணிக்கப்பட்டுவருவதாக குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

13 லட்சம் ரூபா செலவில் அரசாங்கத்தினல் வழங்கப்பட்ட இயந்திரப்படகுகள், கடன் அடிப்படையில் 47 பேருக்கு வழங்கப்பட்டன.

இதில் 33 பேர் பெரும்பான்மை இனத்தவர் 6 பேர் முஸ்லீம்கள் மிகுதி 08 வள்ளங்கள் மாத்திரமே தமிழ் கடற்றொழிலாளருக்கு வழங்கப்பட்டது.

மேலும் வழங்கப்பட்ட 67 கண்ணாடியிழைப்படகுகளில் 30 படகுகள் சிங்களவருக்கும் 32 படகுகள் முஸ்லீம்களுக்கும் 5 படகுகள் மட்டுமே தமிழருக்கு வழங்கப்பட்டுள்ளன. க-சி

## இன்று

(பருத்தித்துறை)

பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரக்கல்லூரி வருடாந்த இல்ல மெய்வலலுநர் போட்டிகள் இன்று கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அதிபர் திருமதி இராஜேஸ்வரி நந்தகுமார் தலைமையில் நடைபெறுகின்றது. யாழ். செயலக திட்டப்பணிப்பாளர் திரு. சி. பசமநாதன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்கிறார். திருமதி ஆர் பத்மநாதன் பரிசில்களை வழங்குவார். -52

0 0 0

(யாழ்ப்பாணம்)

மூளாய் சைவப்பிரகாச வித்தியாலய பாடசாலை அபிவிருத்திச் சங்க வருடாந்தப் பொதுக்கூட்டம் இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-30 மணிக்கு வித்தியாவய அதிபர் திரு. சி. சிவமணி தலைமையில் நடைபெறும்.

0 0 0

(வட்டுக்கோட்டை)

அராலி சரஸ்வதி மகாவித்தியாலய வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 2-00 மணியளவில் கல்லூரி மைதானத்தில் கல்லூரி அதிபர் திருமதி கோ. அம்பலவாணர் தலைமையில் நடைபெறவுள்ளது. யாழ். கல்வி வலயம் இரண்டின் உதவிக் கல்விப்பணிப்பாளர் திரு. வே. மகேந்திரன் பிரதமவருந்தினராகக் கலந்து கொள்வார். -139

0 0 0

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை இந்துக் கல்லூரியின் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி இன்று சனிக்கிழமை பிற்பகல் 1-45 மணியளவில் கல்லூரி மைதானத்தில் அதிபர் திரு. நா. ஜெயநாயகம் தலைமையில் நடைபெறும். வலிமேற்கு பிரதேச செயலாளரும் மேலதிக அரசாங்க அதிபருமான கா சந்திரராசா பிரதம விருந்தினராகவும், சங்கானை கல்விக் கோட்ட உதவிக் கல்விப்பணிப்பாளர் அ தற்பரானந்தன் சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர் -139

0 0 0

(நெல்லியடி)

பருத்தித்துறை பனைதென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்க அங்கத்தவர்களுக்கான கலந்துரையாடல் இன்றுசனிக்கிழமை முற்பகல் 11 மணிக்கு புலோலி அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையிலும், நாளை 26ம் திகதி முற்பகல் 11 மணிக்கு அம்பன் பாடசாலையிலும் நடைபெறவிருக்கின்றது. -160

0 0 0

(கொழும்புத்துறை)

இலங்கைத் தேசிய கயரோகத் தடுப்புச் சங்கம் யாழ்ப்பாணக் கிளையின் விசேட கூட்டம் இன்று சனிக்கிழமை 11-00 மணிக்கு யாழ் மார்பு நோய்ச் சிகிச்சை நிலையத்தில் சங்கத் தலைவர் வைத்திய கலாநிதி கு. மகேசன்தலைமையில் நடைபெறும். -154

## ஜனாதிபதியின் உபசரணைச் செலவு ரூபா 10 லட்சமாக குறைப்பு

(கொழும்பு)

இந்த ஆண்டுக்கான வரவு செலவுத்திட்டத்தில் ஜனாதிபதியின் வருடாந்த உபசரணைச் செலவாக 10 லட்சம் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளது.

இது முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா ஒரு மாதகாலத்தில் செலவிட்ட தொகைக்கு சமமானது. பிரேமதாசா 1992ம் ஆண்டு முதல் 1993ம் ஆண்டு மார்ச் மாதம்வரை உணவுச் செலவுக்காக ஒரு கோடியே 50 லட்சம் ரூபாவை செலவிட்டுள்ளார். 1991ம் ஆண்டில் இருந்து 93ம் ஆண்டு மார்ச் மாதம் வரை ஆடம்பர ஹோட்டல்களுக்காக மட்டும் அவர் ஒரு கோடியே 57 லட்சம் ரூபாவை செலவிட்டுள்ளார்.

திரு. டி. பி. விஜயதுங்க ஜனாதிபதியாக பதவியேற்ற பின்னர் இந்தச் செலவு துரிதமாக வீழ்ச்சியடைந்தது. தற்போதைய ஜனாதிபதி, பதவிக்கு வந்த பின்னர் இன்றுவரை ஒரு லட்சத்து ஐயாயிரம் ரூபா மட்டுமே உணவுக்காகசெலவிட்டுள்ளார். -க-சி

வடமராட்சியில்

## பாலர்பாடசாலைமாணவர்க்கு இலவச பால்

(நெல்லியடி)

வடமராட்சிப் பகுதியிலுள்ள பாலர்பாடசாலை மாணவர்களின்நன்மைகருதி அடுத்த மாதம்முதல் மாணவர்களுக்கு இலவசமாகப் பால் வழங்கப்படவிருக்கின்றது.

உதவிகளற்ற பாலர் பாடசாலை மாணவர்களுக்குகே, வடமராட்சி கால்நடைவளர்ப்போர் கூட்டுறவு சங்க ஆதரவுடன் சத்துணவுக் கூடத்தினூடாக இப்பால் விநியோகம் செய்யப்படவுள்ளதாக பருத்தித்துறை பிரதேச சபை செயலர் எஸ் செல்வந்திநாதர் தெரிவித்துள்ளார். 160-சி

சிங்கப்பூர் செல்லும்

## 500 பணிப்பெண்களுக்கு நேர்முகப் பரீட்சை

(கொழும்பு[

சிங்கப்பூரில் வேலைவாய்ப்பு பெறவுள்ள 500 இலங்கை பணிப்பெண்களுக்கான நேர்முகப்பரீட்சைகள் இவ்வாரம் நடைபெறவுள்ளன.

மேற்படி நேர்முகப் பரீட்சை நடாத்துமுகமாக சிங்கப்பூரில் பதிவு (4-ம் பக்கம் பார்க்க)


யாழ் மாவட்ட

வெதுப்பக உரிமையாளர் சங்க

## அவசர பொதுக்கூட்ட அறிவித்தல்

காலம்: 26-02-1995 ஞாயிற்றுக்கிழமை

நேரம்: மு. ப. 10 மணி

இடம்: தலைமைச் செயலகம்

விடயம்: மா விநியோகமும், நாம் எதிர் நோககும் பிரச்னையும்

அங்கத்தவர் அனைவரையும் தவறாது சமூகமளிக்கும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றீர்கள்.

தலைவர்

யா. மா. வெ. உ. சங்கம்

183, ஆடியபாதம் வீதி.

திருநெல்வேலி,

யாழ்ப்பாணம்.

(எ 4800)



## கல் உடைக்கும் தொழிற்சாலை

சகல கல் உடைக்கும் தொழிற்சாலை உரிமையாளர்களையும் 01-03-95 அன்று பிற்பகல் 3.00 மணிக்கு எமது சங்கக் காரியாலயத்தில் நடைபெறவுள்ள கூட்டத்திற்கு தவறாது சமூகம் தரும்படி அன்புடன் கேட்டுக்கொள்கின்றோம்.

வடமாகாண

ஆசாங்க ஒப்பந்தகாரர் சங்கம்

கண்டி வீதி,

யாழ்ப்பாணம்.

[யாழ் செயலகம் முன்பாக]

மு. சி. சண்முகராசா

செயலாளர்

[எ 4799)



நடுக்கட்டப்பட்ட பொருட்கள்

## ஏல விற்பனை

25/02/95 ஆகிய இன்று நடைபெறவிருந்த ஏல விற்பனை தவிர்க்க முடியாத காரணத்தால் இன்றைய தினம் நடைபெறவில்லை என்பதை அறியத் தருவதோடு எதிர்வரும் சனிக்கிழமை 04/03/95க்கு நியமிக்கப்பட்டுள்ளது, என்பதையும் அறியத்தருகின்றோம்.

04/03/95 அன்று நடக்க இருக்கும் ஏலவிற்பனையில் வீட்டுத் தளபாடங்கள், துவிச்சக்கர வண்டி, இரண்டு ஆட்டுக்கடா என்பன ஏலத்தில் விடப்படும். 04/03/95 க்கு முன் குறித்த வழக்குகளில் சம்பந்தப்பட்டவர்கள் தீர்ப்பில் சொல்லப்பட்ட பணத்தைச் செலுத்தி மீட்காவிடில் 04/03/95 அன்று சனி அன்று ஏலத்தில் விடப்படும்.

ர.பாலசரஸ்வதி,

பதிவாளர்,

தமிழீழ மாவட்ட நீதிமன்று,

பருத்தித்துறை.

(ஏ-4797)



கண்டெடுக்கப்பட்ட பொருட்களும் பணமும்

## மீண்டும் நினைவூட்டல்

மேற்படி பொருட்கள் வல்லை முனியப்பர் கோவிலுக்கு அருகாமையில் கண்டெடுக்கப்பட்டு தமிழீழ மாவட்ட நீதிமன்று பருத்தித்துறை வதிரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன. உரியவர்கள் தகுந்த ஆதாரம் காட்டிப் பெற்றுக் கொள்ளவும்

ர. பாலசரஸ்வதி

பதிவாளர்,

தமிழீழ மாவட்ட நீதிமன்று,

பருத்தித்துறை.

[ஏ-4798)

### மணிவாக்கு

தாயைவிட மேலான ஆசான் இல்லை. வேகத்திற்கு ஒப்பான சாஸ்திரம் கிடையாது. சாந்திக்குச் சமமான சுகம் வேறு இல்லை. பொறுமையை விட வலியதான ஆயுதம் வேறுமில்லை. புகழை விடச் சிறந்த செல்வம் இல்லை. கல்வி அறிவை விடப் பயன் மிக்க லாபம் வேறு இருக்க முடியாது.

—இராமாயணம்.

## நமது நோக்கு

### தமிழ் மொழி அமுல்

''கொழும்பில் உள்ள கல்வியமைச்சில் இருநூறு ஊழியர்கள் உள்ளார்கள் ஆனல் ஒருவர் மாத்திரமே தமிழ் ஊழியர். இதனல் தமிழ் மொழி அமுலாக்கம் எப்படிச் சாத்தியமாகும்?''—இப்படிக் கேள்வி எழுப்பியுள்ளார் நாடாளு மன்ற உறுப்பினர்.

அரச கரும மொழி ஆணைக் குழு பல கட்சிகளையும் சேர்ந்த தமிழ் பேசும் நாடாளுமன்ற உறுப்பினர்களை அழைத்து மாநாடு நடத்தியபோது தான் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது.

பல திணைக்களங்களில் தமிழ் மொழி தெரிந்த ஊழியர்கள் குறைவாகவே உள்ளனர்.

அரச கரும மொழியாகத் தமிழும் அமுலாக்கப் படவேண்டுமாயின், தமிழ் தட்டெழுத்தாளர்கள், சுருக்கெழுத்தாளர்கள் நியமனம் அவசியம்.

ஆனல் —இத்தகைய நியமனங்கள் தாமதமானதேன்?

முன்னைய ஐ. தே. க. வின் 17 ஆண்டு ஆட்சிக் காலத்திலும் ஆணைக் குழு நியமிக்கப்பட்டு, பல தடவைகள் பல விளக்கங்கள் தரப்பட்டன. தீர்மானங்கள் எடுக்கப்பட்டன.

ஆனல் —எடுக்கப்பட்ட தீர்மானங்கள், அமுலாக்கல் திட்டங்கள் ஏட்டளவிலேயே இருந்து வந்துள்ளன.

அரச கரும மொழி ஆணைக் குழுவின் தற்போதைய தலைவர் சார்ள்ஸ் அபயசேகரா வெளியிட்ட தகவல் ஒன்று என்ன தெரியுமோ?

அமுலாக்கல் சுற்றுநிருபங்களே இன்னும் திணைக்களங்களுக்கு அனுப்பி வைக்கப்படவில்லை.

அக்கறையின்மை, அசமந்தப்போக்கு எந்தளவிற்குக் கடந்தகால ஆட்சியின்போது நிலவியிருக்கிறது என்பதற்கு இது ஒன்றே தகுந்த சாட்சி.

அது மாத்திரமல்ல — ஐ. தே க. ஆட்சி முன்னைய காலங்களில் தமிழை ஒதுக்கிவிட எடுத்த நடவடிக்கைகளையும் நாம் மறப்பதற்கில்லை.

தமிழ் மொழி அமுலாக்கலைத் தடுக்க, தாமதப் படுத்த, இடையூறு விளைவிக்க எவர் முற்படுகின்ருரோ, அவருக்குத் தண்டனை வழங்கும் விதியும் சுற்றுநிருபத்தில் உண்டு.

ஆனபடியால்தான் —சுற்றுநிருபத்தையே அனுப்பாது விட்டார்களோ எனச் சந்தேகம் எழுப்புவதில் நியாயம் உண்டல்லவா?

இனவாதச் சிந்தனை எப்படியெல்லாம் செயற்பட்டிருந்தது என்பதெல்லாம் வெளிச்சத்திற்கு வருவதும் நல்லதே!

அன்னை பூபதி

## பொது அறிவுப் போட்டி விண்ணப்பம் ஏற்கப்படுகிறது

[உடுவில்]

தற்கொடையாளி அன்னை பூபதி நினைவுப் பொது அறிவுத் தேர்வுக்கானவிண்ணப்பங்களை பெப்ரவரி 28ம் திகதிக்கு முன்பாக அனுப்பி வைக்குமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு கேட்டுள்ளது.

தமிழீழத்தில் உள்ள பாடசாலைகளில் 6ம் ஆண்டுக்கு மேற்பட்ட வகுப்புக்களில் கல்வி பயிலும் அனைத்துப் பாடசாலை மாணவர்களும் இப்பொது அறிவுத் தேர்வுக்குத் தோற்ற முடியும்.

அனைத்து மாணவர்களும் இத்தேர்வில் பங்குபற்றுவதற்கு வசதியாக நுழைவுக் கட்டணம் இவ்வருடம் 5-00 ரூபாவாகக் குறைக்கப்பட்டுள்ளது.

6, 7, 8ம் ஆண்டு மாணவர்கள் முதனிலைப் பிரிவிலும், 9, 10, 11ம் ஆண்டு மாணவர்கள் இடைநிலைப்பிரிவிலும் 12, 13ம்ஆண்டு மாணவர்கள் உயர்நிலைப் பிரிவிலும் இத்தேர்வுக்கென அனுமதிக்கப் படுவர்.

தேசிய மட்டத்தில் முதல் மூன்று இடங்களைப் பெறும் மாணவர்களுக்கு முறையே தங்கப் பதக்கம், வெள்ளிப் ரிதக்கம், வெண்கலப் பதக்கம் பபசாக வழங்கப்படும். அத்துடன் கல்விக் கோட்ட மட்டத்தில் முதல் இரண்டு இடங்களைப் பெறும் மாணவர்களுக்குப் பெறுமதி மிக்க பரிசுகள் வழங்கப்படும் எனவும் மாணவர் அமைப்பினர் அறிவித்துள்ளனர். 109-சி

## மா, பாணின் விலையை உயர்த்த அரசு திட்டமிட்டு வருகிறது?

(கொழும்பு)

பாணின் விலையும் மாவின் விலையும் அதிகரிக்கப்படவுள்ளதாக நேற்றைய கொழும்பு தினசரிகள் செய்திகள் வெளியிட்டுள்ளன.

இதன் பிரகாரம் 3000 ரூபாவுக்கு குறைந்த வருமானம் உள்ளவர்களுக்கு இவற்றை மானியவிலையிலும், 3000 ரூபாவுக்கு மேற்பட்டவர்களுக்கு வேறு விலையிலும் கொடுப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும் இந்தச் செய்தியை அரசாங்கம் மறுத்து, அறிக்கை ஒன்றினையும் வெளியிட்டுள்ளது.

இதேவேளை வேறுபொருட்களின் விலைகளை உயர்த்தவும் அரசு திட்டமிட்டுள்ளதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

(ம-சி)

## வெளிநாட்டு நிதி உதவியில் பெருமளவு வீண்விரயமாயின

(கொழும்பு)

நாட்டின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு பெற்றுக் கொள்ளப்பட்ட பெருமளவு வெளிநாட்டு நிதிகள் உரிய முறையில் பயன்படுத்தப்படவில்லை என்று பல நிறுவனங்கள் குற்றம்சாட்டியுள்ளன.

பெருந்தொகையானபணம், கருந்தரங்குகள், உரையாடல்கள், பயிற்சித் திட்டங்கள், சுற்றுலாக்கல் போன்ற நிகழ்வுகளுக்கு வீண் விரயம் செய்யப்பட்டுள்ளதாம்.

பல திட்டங்களுக்காக செலவிடப்பட்ட பெரும் தொகை பணம் அதனை வழங்கிய அமைப்புக்களின் நோக்கங்களை நிறைவேற்றவில்லையென்றும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

வெளிநாட்டு அரசாங்கங்களிடமிருந்தும், அமைப்புக்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் வட்டியுடன் திருப்பிச் செலுத்த வேண்டியுள்ளதாகவும் இந்த வெளிநாட்டு உதவிகளால் பலன்கள் கிட்டவில்லை எனவும் அந்த நிறுவனங்கள் தெரிவித்துள்ளன. -ம-சி

### இராசி பலன்

25-02-1995

சனிக்கிழமை

(தமிழுக்கு மாசி -13)

ஏகாதசி முன்னிரவு 11-25 வரை, பூராடம் பின்னிரவு 2-16 வரை, மரணயோகம், இராகுகாலம் காலை 9-30 முதல் 11 00 வரை, சுப வேளை. மாலை 3-30 முதல் 5-00 வரை.

மேஷம்: குடும்ப கவலை, தொழில் பாதிப்பு, பணக் கஷ்டம்.

இடபம்: தந்திரோபாயம், உடல் அசதி, கடின வேலை.

மிதுனம்: சுய மரியாதை, கல்வியால் பெருமை, பயண நன்மை.

கடகம்: பெருமையாக பேசுதல், தாயார் உதவி, நற்செய்தி.

சிங்கம்: அதிகாரிகள் சினம். மனநிலை பாதிப்பு, அலைச்சல்.

கன்னி: தொழில் நஷ்டம், வருவாய் பாதிப்பு, உறவினர் பகை.

துலாம்: சுபகாரியம், பெண் உதவி, கலந்துரையாடல்,

விருச்சிகம்: வீண் பகை, கெட்ட கனவு, தடுமாற்றம்,

தனுசு: நோய் தணிவு, கலகலப்பு, வெளியார் சந்திப்பு.

மகரம்: முரண்பாடு, எதிர் பாராத துன்பம், அகால உணவு,

கும்பம்: உற்சாகம், பொதுப் பணி ஈடுபாடு, தற்பெருமை.

மீனம்; தொழில் சிறப்பு, மாமனர் அறிவுரை, தான தர்மம்,

— ஜோஸ்யர்

மணிப்பூரில்

## ஆட்சி அமைக்கும் வாய்ப்பை காங்கிரஸ் இழந்தது

(டில்லி)

மணிப்பூரில் 59 தொகுதிகளிற்கு நடந்த சட்ட மன்ற தேர்தலில் எந்தக் கட்சிக்கும் அறுதிப்பெரும்பான்மை கிடைக்கவில்லை.

21 தொகுதிகளில் இந்திரா காங்கிரசும், பல கட்சிகள் இணைந்த கூட்டணி 32 இடங்களையும் கைப்பற்றியுள்ளன.

தனிக்கட்சியாக பல இடங்களை கைப்பற்றியுள்ள இந்திரா காங்கிரஸ், தம்மை அரசமைக்க அழைக்குமாறு ஆளுநரை கேட்டுள்ளது. ஆனல் பலகட்சிகள் இணைந்த கூட்டணி, அரசை அமைப்பதற்கான நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளது என்றும் கூறப்படுகிறது.

(ம-சி)

தீவுப் பகுதி நியமனம்

## 14 கிராம சேவகர்களும் அரச அதிபருக்கு புகார்

(கொழும்பு)

தீவுப் பகுதிக்கென தெரிவு செய்யப்பட்ட 14 கிராம சேவையாளர்களும் தாம்தீவுப் பகுதிக்கு சென்று கடமையாற்ற ஒழுங்குசெய்து தருமாறு யாழ். அரச அதிபர் க. பொன்னம்பலத்தை கேட்டுள்ளனர்.

இதுசம்பந்தமான மகஜர் ஒன்றையும் அவர்கள் அரச அதிபரிடம் கையளித்துள்ளனர். இவர்கள் நியமனம் பெற்ற திகதியில் தீவுப் பகுதிக்கு சென்றபோதும் அங்கு கடமையாற்ற முடியாமல் திரும்பிவந்ததையடுத்தே தமக்கு உதவிசெய்யுமாறு இவர்கள் கேட்டுள்ளனர்.

இவர்களுடன் நியமனம் பெற்ற மிகுதி 86பேரும் யாழ். மாவட்டத்தின் பல பகுதிகளிலும் கடந்த 6 மாதங்களிற்கு மேலாக கடமையாற்றிவருகின்றனர்.

மேற்படி 14 பேரும் எதுவித வேதனமும் பெறமுடியாது இருப்பது குறித்து அமைச்சரவை அதிகாரிகளைச் சந்தித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக யாழ். அரச அதிபர் உறுதியளித்துள்ளார்.

-க-சி

### பிற்போடப்பட்டது

(பருத்தித்துறை)

வடமராட்சிப் பகுதி ஆங்கில ஆசிரியர்களுக்கு இன்று 25ம் திகதி வட இந்து மகளிர் கல்லூரியில் நடாத்தப்படவிருந்த சேவைக்கால ஆசிரியர் கருத்தரங்கு அடுத்த மாதம் மூன்ரும் திகதி வெள்ளிக்கிழமை வட இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறுமென வடமராட்சி ஆங்கிலக் கல்வி ஆலோசகர் திருமதி ஜெயபூபதி குலசிங்கம் அறிவித்துள்ளார். -52

தமிழ் மண்ணைக் காக்க விரைந்திடுவோம்
மரங்கள் காக்க எழுந்திடுவோம்

### 28 வரை விண்ணப்பிக்கலாம்

(பருத்தித்துறை)

அரசசேவையில் உள்ள எழுதுநர்சேவைக்கும் அதனேடிணைந்த சேவைகளுக்கும் அரச கூட்டுத்தாபனங்களில் உள்ள எழுதுநர் சேவைக்கும் ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடாத்தப்படவுள்ள பொதுப் பரீட்சைக்கு இம்மாதம் 28ம் திகதி வரை விண்ணப்பிக்கலாமென பொதுநிர்வாக உள்நாட்டலுவல்கள் பெருந்தோட்ட கைத்தொழில் பாராளுமன்ற அலுவல்கள் அமைச்சு சேயலாளர் திரு. ஆர். எஸ். ஜயரத்தின அறிவித்துள்ளார். இவ் விண்ணப்பம் சம்பந்தமான மேலதிக விபரங்கள் பருத்தித்துறை பிரதேசசபை, புலோலி பொது நூலகத்தில் பொது மக்கள் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளது. -52

## பலதும் பத்தும்

### என்ன நடக்கிறது?

காட்சி: கடற்படை அதிகாரி ஒருவர் வடபகுதிக்கு மாற்றம். அவர் அமைச்சர் ஒருவரை அணுக அமைச்சர் கடற்படைத் தளபதியை அணுக... காரியம் கைகூடவில்லை!

காட்சி 2: அமைச்சர் ஜனதிபதியைச் சந்திக்க... அவர் தளபதியைச் சந்திக்க... கட்டுப்பாடுகள் விளக்கங்கள் தரப்பட்டன; காரியம்...? கைகூடவில்லை!

காட்சி 3: அமைச்சர் ஜனதிபதியை மீண்டும் சந்தித்து வலியுறுத்த... அமைச்சருக்கா தளபதிக்கா முக்கியத்துவம் என்ற கேள்வி எழ...? அதிகாரப் பிரயோகம்!

காட்சி 4; ஜனதிபதி எழுத்து மூலம் கட்டளை இட... வேறு வழியில்லாமல் தளபதி வேண்டா வெறுப்பாகக் கட்டளையை ஏற்கிருர்!

நாடகம் முடிந்ததா? மேலும் காட்சிகள் வருமா?

— மயூரன்

### புலிகளின் குரல் நிகழ்ச்சி நிரல்

1995-02-25

சனி இரவு

08-01 புரட்சிக்குரல்
08-05 நிகழ்வும் பகிர்வும்
08-20 நேயர் கடிதங்கள்
08-30 செய்திகள்
08-40 கலந்துரையாடுவோம்-நிகழ்ச்சியில் ''பனை, தென்னை வள அபிவிருத்தியில் தமிழீழ மக்களின் பங்கு'' என்பன இடம்பெறும்.

1995-02-26

ஞாயிறு காலை

07-02 மாவீர வணக்கம்
07-15 களத்தில் மலர்ந்தவை
07-30 செய்திகள்
07-35 பத்திரிகைச் செய்திகள்
07-40 களத்தில் மலர்ந்தவை நிகழ்ச்சியில் தொடர்ச்சி என்பன இடம் பெறும்

### தமிழீழ வானொலி நிகழ்ச்சி நிரல்

1995-02-25

சனி மாலை

05-01 சிந்தனைச் சிதறல்
05-02 எழுச்சி கீதம்
05-10 புதியவை
05-15 வேங்கையின் நெஞ்சம்
05-30 அறிவியல் விஞடி விஞப் போட்டி
06-00 சிந்தனைக்குச் சில விஞடிகள்
06-02 பாமாலை
06-15 என் தெரிவு
06-30 மாலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

# இனப்பிரச்னைக்கு தீர்வுகாண

## தேசிய அரசு அமைக்கவேண்டும்

### ஐ. தே. க. எம். பி. சுசில் முனசிங்க

(கொழும்பு)

''வடக்கு கிழக்கு பிரச்னைக்குத் தீர்வு காண தேசிய அரசாங்கம் ஒனறு அமைக்கப்படவேண்டும்.''

இவ்வாறு ஐ தே. கட்சியின் முக்கிய பிரமுகரும், நாடாளுமன்ற உறுப்பினருமான திரு சுசில் முனசிங்கா, இலங்கை வானொலிக்கு அளித்த பேட்டியில் கூறிஞர்.

அவர் தமது பேட்டியில் மேலும் கூறுகையில்: இனப் பிரச்னைக்கான தீர்வ தற்காலிகமானதாக இருக்கக் கூடாது. அது ஒரு நிர்ந்தரத் தீர்வாகவே இருக்கவேண்டும். இத்தீர்வு ஏதிர்காலச் சந்ததியினருக்கு அமைதியான வாழ்வு ஒன்றை ஏற்படுத்தக் கூடியதாக இருக்கவேண்டும்.

பெரும்பான்மைச் சிங்கள மக்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து இந்தச் முயற்சிக்கு சமாதானத் தீர்வு ஒன்றை ஏற்படுத்த முயலவேண்டும். தென்னிலங்கை மக்கள் இந்த நீண்டகாலப் பிரச்னைக்கு ஒரு சமாநானத் தீர்வு காணப்படவேண்டும் என்பதை தற்போது உணர்ந்துள்ளார்கள் என்று கூறிஞர். -வி-இ

## பாதிக்கப்பட்ட தீவக மக்கள் விபரம் திரட்டு

(யாழ்ப்பாணம்)

பாதிக்கப்பட்ட தீவக மக்களின் விபரங்களை இடம் பெயர்ந்த தீவகமக்கள் நலன் காக்கும் கழகம் திரட்டிவருகிறது.

வேலணை பிரதேச செயலர் பிரிவில் உள்ள வேலணை, மண்கும்பான், மண்டைதீவு, அல்லைப்பிட்டி ஆகியவற்றில் பாதிக்கப்பட்டோர், இல;65, புதிய வீதி, அத்தியடியில் உள்ள தீவக நலன் காக்கும் கழகதலைமைக் காரியாலயத்தில் இன்றும் 26, 27ம் திகதிகளிலும் தங்கள் பதிவை மேற்கொள்ளலாம்.

புங்குடுதீவு மக்களின் விபரமும் மண்டைதீவு கிழக்கு (ஜே 7) பிரிவு மக்களின் விபரங்களும் இன்று சனியும் 26ம் திகதியும் யாழ். பிறவுண் வீதியில் உள்ள புங்குடுதீவு மகாவித்தியாலயத்தில் தங்கள் பதிவைமேற்கொள்ளலாம் என்று இடம் பெயர்ந்த தீவக நலன் காக்கும் ஒன்றியம் அறிவித்துள்ளது. ம-சி

## சண்டேரைம்ஸுக்கு எதிராக ஜனாதிபதி வழக்கு

(கொழும்பு)

'சண்டே ரைம்ஸ்' பத்திரிகையில் ஜனாதிபதி சம்பந்தமாக வெளிவந்த கட்டுரைக்கு எதிராக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க மானநஷ்ட வழக்கு தாக்கல் செய்யலாம் என்று தெரிவிக்கப்படுகிறது.

'சண்டே ரைம்ஸ், பத்திரிகை ஜனாதிபதியை நிந்தனை செய்யும் வகையிலே கட்டுரை ஒன்றை பிரசுரித்திருந்ததாக அரசு குற்றஞ்சாட்டியிருந்தது தெரிந்ததே. ம-இ

### பென்ஷன் வவுச்சர்

(மானிப்பாய்)

யாழ்- மாவட்ட ஓய்வூதியர்களின் இம்மாதத்துக்குரிய பென்ஷன் வவுச்சர்கள் யாழ். செயலகத்திற்கு நேற்று வந்து சேர்ந்தன.

இவற்றை தரம் பிரித்து உரியவர்களுக்கு அனுப்பி வைக்கும் பணியில் ஒய்வூதியப் பிரிவு உத்தியோகத்தர்கள் ஈடுபட்டுள்ளனர்.

-71-162-இ

முன்னைய அரசே

## 2500 கோடி ரூபா செலவுக்கு காரணம்

[கொழும்பு]

முன்னைய அரசாங்கம் தமிழ் மககளை திட்டமிட்டு தாக்கியதனுல்தான் தமிழ் இளைஞர்கள் ஆயுதங்களை நாடியுள்ளனர், யாழ் மக்களுக்கு கொடுத்த தொல்லைகளால் தான் அரசாங்கம் வருடாந்தம் 2500 கோடிரூபா செலவழிக்க வேண்டியுள்ளது என்று குருநாகல் மாவட்ட பொதுசன முன்னணி நாடாளுமன்ற உறுப்பினர் நாடாளுமன்றில் குறிப்பிட்டார்.

அவர்மேலும் கூறியதாவது: யாழ் நூலகம் எரிக்கப்பட்டது. கறுப்பு ஜூலையில் என்ன நடந்தது? தமிழர்கள் திட்டமிட்டு தாக்கப்பட்டார்கள். இதனுல் தமிழ் மக்கள் பாதிக்கப்பட்டார்கள். இதன் விளைவாக இந்த நாடு பெரும் யுத்தம் ஒன்றை எதிர்நோக்கியுள்ளது. பெருந்தொகையினர் இதில் கொல்லப்பட்டார்கள் என்ருர். ம

## போருக்கு சில பத்திரிகைகள் தூபம்

(கொழும்பு)

யுத்தத்தை தொடர்ந்து நடத்துவதற்கு சில பத்திரிகைகள் தூபம் போடுகின்றன என்று அமைச்சர் சமரவீர தெரிவித்துள்ளார்.

இதேவேளையில் அண்மைக் காலங்களில் கொழும்பில் இருந்து வெளிவரும் சிங்கள, ஆங்கில பத்திரிகைகள் இனத்துவேஷத்தை தூண்டும் வகையில் செய்திகளும், கட்டுரைகளும் பிரசுரித்து வருகின்றன என்று பலர் கருத்து தெரிவித்து வருவதும் குறிப்பிடத்தக்கது. -ம-இ

## ராணுவ அதிகாரிகளுக்கு எதிராக விசாரணை

(கொழும்பு]

இரண்டு இராணுவ உயர் அதிகாரிகளுக்கு எதிராக லஞ்ச ஊழல் குற்றச் சாட்டுக்கள் தொடர்பான விசாரணைகளை அரசு ஆரம்பித்துள்ளது.

இந்த இரண்டு அதிகாரிகளும் இப்போது நாட்டை விட்டுவெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதேவேளையில் தமக்கு எதிராக கொள்ளப்படவிருக்கும் எந்தவொரு விசாரணைக்கும் முகம்கொடுக்கத் தயாராக இருப்பதாக சம்பந்தப்பட்ட இரு அதிகாரிகளும் தெரிவித்துள்ளனர். இ

### புலிகள்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கப்படமாட்டாது.

தற்போது இடம்பெறும் பேச்சுவார்த்தைகள் நல்லெண்ண அடிப்படையில் நடத்தப்படுகின்றன. மோதல் தவிர்ப்பு ஒப்பந்தம் வெற்றிகரமாக செயற்படுத்தப்பட்டு வருகின்றது.

சமாதானத்திற்கு விரோதமான சில பிரிவினரே சில பொய்ப் பிரசாரங்களை கட்டவிழ்த்து விடுகிறுர்கள்.

விடுதலைப்புலிகள் முன்னைய அரசாங்கத்துடன் நடத்திய பேச்சுக்களுக்கும், தற்போதய அரசு நடத்தும் பேச்சுக்களுக்கும்நிறையவித்தியாசம்உண்டு. முன்னைய காலததில் விடுதலைப் புலிகள் தம்மைப் பலப்படுத்திக்கொள்ள போதுமான வாய்ப்புக்கள் இருந்தன. ஆனுல் தற்போதய சூழ்நிலையில் அப்படியான வாய்ப்புக்கள் இல்லை.

முன்னைய காலங்களில் விடுதலைப் புலிகள் அரசுடன் பேச்சுக்கள் நடத்திக் கொண்டிருவேளையில் ஆயுதங்கள், வெடி மருந்து, வாகனங்கள் கொண்டுவர புலிகளுக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்தன. பேச்சுவார்த்தைகள் ஒழிவு மறைவாகவே நடத்தப்பட்டன நாடாளுமன்றத்தில் எதுவித விபரமும் தெரிவிக்கப்படவில்லை. இத்தகைய தவறுகளுக்கு இந்த அரசாங்கம் இடமளிக்கமாட்டாது என அமைச்சர் மேலும் கூறிஞர்.

வி-கே-இ

## பரீட்சை நிலையம் இடமாற்றம்

(யாழ்ப்பாணம்)

நாளை 26ம் திகதி காலை 9 மணிக்கு தமிழீழ நிர்வாக சேவையினரால் நடாத்தப்படும் போட்டிப் பரீட்சை தவிர்க்க முடியாத காரணத்திஞல் யா/ அரியாலை கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயததில் நடைபெறும என்பதை சகல பரீசாாத்திகளுக்கும் அறிவிக்கப்பட்டுள்ளது.

முன்னர் அறிவிக்கப்பட்டவாறு யா/கொழும்புத்துறை இந்து மகாவித்தியாலயத்தில் இப் பரீட்சை நடைபெறமாட்டாது எனபதையும் பரீட்சார்த்திகள் கவனத்தில் கொள்ளவும். மேற்படி பரீட்சைக்கான அனுமதி அட்டைகள் ஏற்சனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. எனவே பரீட்சார்த்திகள் அனைவரும் குறித்த நேரத்தில் பரீட்சை மண்டபத்துக்கு சமூகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர் என்றும் தமிழீழ நிர்வாகசேவை அறிவித்துள்ளது.

## சமாதான முயற்சிகளை குழப்ப முயற்சி

### ரத்வத்த தகவல்

(கொழும்பு)

வடக்கு கிழகது போரின் மூலம் பெருமளவு லாபம் அடைந்து வந்த பகுதியினர் சமாதான முயற்சிகளை முறியடிப்பதற்காக தொடர்ந்தும் நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த இவ்வாறு தெரிவித்துள்ளார்.

ராய்ட்டர் செய்தி ஸ்தாபனத்துக்கு திரு. ரத்வத்த மேலும் தெரிவித்ததாவது:

ஆயுதக் கொள்வனவு விவகாரத்தில் கடந்த அரசுகாலத்தில் இரண்டுகோடி 50 லட்சம் அமெரிக்க டொலர் கமிஷனுகப் பெறப்பட்டுள்ளது.

ரஷ்யாவுடன் செய்துகொள்ளப்பட்ட ஆயுதக்கொள்வனவு ஒப்பந்தம் ஒன்றை இந்த அரசு பதவிக்கு வந்ததும ரத்துச் செய்தது என்ருர்.

### சிங்கப்பூர் செல்லும்

(2ம் பக்கத் தொடர்ச்சி)

செய்யப்பட்ட முகவர் நிலையத்தைச் சேர்ந்தபிரதிநிதிகள் குழு ஒன்று ஏற்கனவே இலங்கை வந்துள்ளது.

கொழும்பு வெளிநாட்டு வேலை வாய்ப்பு பணியகம் மற்றும் கேகாலை, மாத்தறை போன்ற இடங்களிலும் இந்த நேர்முகப்பரீட்சை நடைபெறவுள்ளது,

10 ஆயிரம் இலங்கை பணிப்பெண்களுக்கு சிங்கப்பூரில் வேலை வாய்ப்பு பெறறுக் கொடுக்கும் முயற்சியின் முன்னேடியாகவே இந்த நேர்முகப்பரீட்சை நடத்தப்படுகிறது. க-சி

### அரசு புலிகள்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

தயாள் சர்மா பேசுகையில்; அமைதியான வகையில் தீர்வு காணப்படுவதை இந்தியா எப்போதும் ஆதரித்து வந்திருக்கிறது. அமைதியை நிலைநாட்டும் முயற்சிகளில் கொழும்பு வெற்றி அடையவேண்டும் என்ருர். ம-இ

### ஐ. தே. க. நியமித்த

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பொதுநிர்வாக அமைச்சு சுற்று நிருபம் மூலம் அறிவித்துள்ளது.

இந்த சுற்று நிருபத்தின் மூலம் வேலை இழக்கும் பயிற்சியாளர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து பொதுச்சங்கம் ஒன்றை அமைத்து ஜனுதிபதியிடம் இந்த சுற்று நிருபத்தை வாபஸ் வாங்குமாறு கேட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப்படுகிறது. - ம-இ

### வடபகுதி

[1ம் பக்கத் தொடர்ச்சி]

போதைய நிலையிலிருந்து மேலும் 500 மீற்றருக்கு அப்புறப்படுத்தப்படும்

வடபகுதிக்கு இராணுவச் சாதனங்கள் தவிர்ந்த உணவுப் பொருள்களும். மருத்துவ உபகரணங்களும மற்றும் அனைத்துப் பொருட்களும், மருந்துகளும் அனுப்பப்படுவதற்கு இந்த பாதை திறப்பு உதவியாக இருக்குமென்று அந்த அறிக்கையில் மேலும தெரிவிக்கப்பட்டுள்ளது. -இ

### தீவிரவாத

1-ம் பக்கத் தொடர்ச்சி)

ஞல்அமைச்சர் அஷ்ரப்புக்கு முஸ்லிம்களின்ஆதரவுஅதிகரித்திருப்பதாகவும் அரசியல் அவதானிகள் கருத்து தெரிவித்துள்ளதாக பி, பி. ஸி, தெரிவித்தது, வி இ

### படைகளில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாதுகாப்பு அமைச்சின் நிதி ஒதுக்கிடு சம்பந்தமான குழுநிலை விவாதத்தில் தொடர்ந்து பேசிய ஜனுப் ஹமீத் மேலும் கூறியதாவது;

பிரிட்டனில் ஒரு முறை இனப்பிரச்னை ஏற்பட்டபோது இதே முறைதான் கையாளப்பட்டது.

சகல இனங்களைச் சேர்ந்தவர்களையும் அவர்கள் படைகளில் ஒன்று சேர்த்தனர். பிரச்னையில் வெற்றியும் கண்டனர்.

எமது நாட்டின் பிரச்னையை சகல கட்சிகளின் ஒத்துழைப்புடனும் தீர்க்க வேண்டும் என்ருர். இ

### பின்போடப்பட்டது

(யாழ்ப்பாணம்)

தொழில் வங்கியில் பதிவு செய்வதறகான விண்ணப்பப் படிவம்எதிர்வரும்மார்ச்மாதம் 10ம்திகதியிலிருந்துதமிழீழநிர்வாக சேவை செயலகத்தில் விநியோகிக்கப்படவுள்ளது. இன்று முதல் இந்த விண்ணப்பப்படிவம் விநியோகிக்கப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தும் தவிர்க்கமுடியாத காரணத்திஞல் அது மேற்படி திகதிக்கு பின்போடப்பட்டுள்ளது என தமிழீழ நிர்வாக சேவை அறிவித்துள்ளது.

### கல்வி அமைப்பை

(1ம் பக்கத் தொடர்ச்சி)

கள் முக்கிய கவனம் செலுத்தும். இவற்றின் செயற்பாடுகளைக் கவனிப்பதற்கு கல்வி வலயங்களுக்கு பணிப்பாளர்கள் நியமிக்கப்படுவார்கள்.

ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவது, ஒய்வூதியங்கள் வழங்குவது. பாடசாலை கட்டிடங்களைப் பராமரிப்பது, பரீட்சைகளை நடாத்துவது போன்ற கடமைகளை பல்வேறு வலயங்களுலுள்ள கல்வி அலுவலகங்களில ஒப்படைக்கப்படும், இவற்றின் நடவடிக்கைகளை மேற்பார்வை செய்வதற்கு மாவட்ட அலுவலகங்கள் அமைக்கப்படும்.

இப்புதிய அமைப்புக்கு அமைய' கல்வி நிர்வாகிகளுக்குப் புதிய படி வழங்கும் திட்டமும் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது என்று கல்வி அமைச்சர் தெரிவித்துள்ளார். -வி-இ

### கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா

(யாழ்ப்பாணம்)

மீசாலையூர் கமலாவின் ''விடியலின் கீதம்'' கவிதைத் தொகுதி வெளியீட்டு விழா நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு நடைபெறவுள்ளது. ம

### பயிற்சி நெறி

(யாழ்ப்பாணம்)

மனைப்பொருளியல் ஆசிரியர்களுக்கான புத்தூக்க பயிற்சி நெறி ஒன்று மகளிர் அபிவிருத்தி நிலையத்தின் அனுசரணையுடன் இன்று சனிக்கிழமை காலை 10 30 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

### மோசமான

(1ம் பக்கத் தொடர்ச்சி)

னைக்கு நாம் சரியான தீர்வு எடுக்கவேண்டும். அரசியல் ஆட்சியை பிடிக்க இனப்பிரச்னையை பகடக்காயாக மாற்றக்கூடாது என்ருர். -ம

இப்பத்திரிகை ''ஈழநாடு'' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம், சிவன்கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1995-ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 25-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a News Paper at the General Post Office SriLanka under Licence Number B/16336/B-